# BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)

## Kahardu?








## உறவுகளுக்கு வணக்கம்

இனிய புத்தாண்டு வாழ்த்துக்களும், தமிழர் திருநாளாம் பொங்கல் பெருவிழா வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

கடந்த 2023இல் பல நெருக்கடிகளின் மத்தியிலும் தேன் தமிழ் இதழ் பல்வேறு ஆக்கப்பூர்வமான இலக்கியப் படைப்புக்களோடும், நோர்வே நாட்டின் பிரதான செய்திகளோடும் உங்களைச் சந்தித்திருக்கின்றது.

நோர்வே நாட்டிலிருந்தும் ஏனைய பல நாடுகளிலிருந்தும் எமது அன்புக்குரிய வாசகர்கள் பலரும் ஆக்கப்பூர்வமான பல விமர்சனங்களைத் தந்து எம்மை ஊக்குவித்தமை பெரு மகிழ்வினை தந்துள்ளது. அனைவருக்கும் இனிய நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

கடந்த ஆண்டில் உலகின் பல பாகங்களிலும் யுத்த அனர்த்தங்களும், அதன் விளைவால் மனித குலம் சந்தித்த அழிவுகள் அவலங்களும் மேலும் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. உலக அரசியல் தலைவர்களோ, சமாதான விரும்பிகளோ, அமைதி காக்கும் நாடுகளோ இப்பேரழிவுகளை நிறுத்த முடியாத நிலை. 2024ம் ஆண்டிலாவது ஒரு நீதியான விடிவு கிடைக்காதா, எமது உயிர்கள் பாதுகாக்கப்படாதா என்ற ஏக்கத்தோடு ஏராளமான மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் உலக சமாதானத்திற்கும், நீதிக்கும், அமைதிக்கும் குரல்கொடுக்க முற்படுகின்ற நோர்வே நாட்டுக்குள்ளும் தீவிரவாத தாக்குதல்கள் நடைபெற்றுவிடுமோ? நோர்வேயின் அமைதி சீர்குலைந்து விடுமோ? என்ற அச்சம் இந்நாட்டு மக்களிடம் ஏற்பட்டுள்ளமையினை உணர முடிகிறது. இதற்காக நோர்வேயின் காவல்துறையினர் பல வழிகளிலும் பாதுகாப்பு வழிகளை பலப்படுத்தியும் வருகின்றனர். இருப்பினும், நோர்வே நாட்டு மக்கள் மனங்களில் சிறிது அச்சம் ஏற்பட்டுள்ளமையினை உணர முடிகிறது.

யுத்தகளத்தில் நிற்கும் நாடுகளும், அதற்கு ஆதரவு கொடுத்து வளர்த்துவரும் நாடுகளும் தம் மனங்களை மாற்றி, மனித உயிர்களையும், உடமைகளையும் மதித்து, மனிதத்தினை வளர்க்காவிடில் போர்களும், அழிவுகளும் தொடரத்தான் போகிறது. உலக மக்கள்தொகையில் 200 கோடி மக்கள் போர்ச்சூழலில் வாழ்ந்து வருகிறார்கள் என ஐக்கிய நாடுகள் சபை கடந்த ஆண்டில் அறிக்கை வெளியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நிலை தொடருமானால் பல நாடுகளில் அவர்களது எதிர்கால சந்ததியினரையே இழந்து விடுவார்கள்.
போர் ஒழிந்து நீதியான அமைதி பிறக்க உலக நாடுகள் ஒன்றுபட்டு உழைத்திட வேண்டும் என்பதே தேன்தமிழ் இதழின் ஆவலாகும்.

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674
BTA BERGEN TAMILSK AVIS

# பொங்கல் விழா - உதவும் கரங்கள்



நோர்வே உதவும் கரங்கள் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் பொங்கல் விழா கடந்த தை 27ம் நாளன்று பேர்கன் Vannkanten கலாச்சார மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.



பேர்கன் நகரில் உள்ள பல கலைக் கூடங்களின் நெறிப்படுத்தலில் பெரும்பாலான சிறுவர்கள், இளையோர் நிகழ்ச்சிகளில் கலந்து தமது கலைத்திறனையும், கலைமேல் தாம் கொண்டுள்ள பற்றினையும் வெளிப்படுத்தினர். பேர்கன் சித்திவிநாயகர் ஆலய குருக்கள் சிறி ஆனந்த ராஜ குருக்கள், பிருந்தாவன சாரங்க ஆசிரியர்கள், மற்றும் உதவும் கரங்கள் உறுப்பினர்களின் மங்கல விளக்கேற்றலுடன் குறிப்பிட்ட நேரத்திற்கே ஆரம்பமாகிய நிகழ்வுகளை கஜானன் கிருஷ்ணதாஸ் என்ற இளைஞன் சிறப்பாக தொகுத்து வழங்கினார். குருக்களின் பொங்கல் தொடர்பான வாழ்த்துரை, சிறுவர்கள், இளையோரின் கிராமிய இசை, கிராமிய நடனங்கள், புல்லாங்குழல் இசை, பொங்கல் கவிதை மற்றும் உதவும் கரங்களின் செயற்பாடுகள் என பல மாறுபட்ட நிகழ்வுகள் 2024ம் ஆண்டின் பொங்கல் விழாவினை அலங்கரித்தன. நாவுக்கு சுவையான பொங்கல் சுண்டல் பரிமாறப்பட்டன. தமிழர்களின் பெருவிழாவான பொங்கல் விழாவினை 1990ம் ஆண்டிலிருந்து பேர்கன் நகரில் உதவும் கரங்கள் அமைப்பினர் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




இவ்விழாவுக்கு இங்குள்ள கலை நிறுவனங்கள், அன்னைபூபதி கலைக்கூடம், கலை ஆர்வலர்கள் கரம் கொடுத்து உதவினர். நிகழ்ச்சிகளுக்கு திரு. இராமகிருஷ்ணன் மற்றும் செல்வன் கிறிஷான் ரமேஷ் அவர்கள் சிறப்பாக ஒலியமைப்பினை வழங்கினர்.

படங்கள்: தொம்சன் பாலா

# சட்டம் தன் கடமையைச் செய்யும்



2023இல் நோர்வேயில் பதிவு செய்யப்பட்ட கட்டாயத் திருமணம், சுய கௌரவம் தொடர்பான வன்முறை மற்றும் எதிர்மறை சமூகக்கட்டுப்பாடு போன்ற வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எதிர்மறையான சமூகக் கட்டுப்பாடு மற்றும் கௌரவம் தொடர்பான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு 2023இலேயே மிக அதிகமான பதிவுகளைக் கையாண்டுள்ளது. குழந்தைகள் நல சேவைக்குழுவும், காவல்துறைத்துறையினரும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வழிகாட்டுதல் பணிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

2023ஆம் ஆண்டில், மேற்கண்ட இவ்விடயங்கள் தொடர்பில் 1137 வழக்குகள் பதிவாகி உள்ளன. அவை அனைத்திலும் குழந்தைகள் நல சேவைக்குழுவும், காவல்த்துறையினரும் ஈடுபட்டு உதவியுள்ளனர். இது 2022ம் ஆண்டினை விடவும் 28% அதிகமாகும் என Bufdir அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

கட்டாயத் திருமணம், கௌரவம் தொடர்பான வன்முறை, எதிர்மறையான சமூகக் கட்டுப்பாடு மற்றும் பிறப்புறுப்பைச் சிதைத்தல் போன்றன சட்டவிரோதமானது. இவ்வாறான வன்முறைகளைத் தடுக்கவும், அவை தொடர்பான அறிவினைப் புகட்டவும் பல குழுக்கள், தொண்டுநிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இருந்தபோதும் அவை அதிகரித்தவண்ணமே உள்ளன.

கௌரவம் தொடர்பான வன்முறை, எதிர்மறை சமூகக் கட்டுப்பாடு, கட்டாயத் திருமணம் செய்து பிள்ளைகளை வெளிநாட்டில் குடியமர்த்துதல் போன்றன தடுக்கப்பட்டு வெளிக்கொணரப்படுவதோடு பாதிக்கப்பட்டவர்கள் தகுந்த உதவிகளைப் பெறவேண்டும் என்பதும் முக்கிய நோக்கமாகும்.

# UN அமைப்பிற்கான ஆதரவை பல நாடுகள் இடைநிறுத்துகின்றன

அக்டோபர் 7ம் நாளன்று இஸ்ரேல் மீதான தாக்குதலில் ஐ.நா அமைப்பின் ஊழியர்கள் பங்கேற்றதாக சந்தேகம் எழுந்ததை அடுத்து அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், பின்லாந்து மற்றும் பல மேற்கத்திய நாடுகளும் பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் வேலை முகமைக்கான (UNRWA) ஆதரவை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன.

UNRWA என்பது பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உதவி அமைப்பாகும். இஸ்ரேல் மீதான தாக்குதலில் ஊழியர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்று விசாரணை நடத்தி வருவதாக அந்த அமைப்பு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து UNRWAக்கான ஆதரவை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்தது. அத்துடன் கனடா, இத்தாலி, ஆஸ்திரேலியாவும் அவ்வாறே செய்கின்றன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தம் முடிவடைந்ததும் காசாவில் UNRWA என்ற ஐநா அமைப்பின் பணிகளை நிறுத்த முயற்சிப்பதாக இஸ்ரேல் அரசாங்கம் கூறுகிறது. இருப்பினும், நோர்வேயின் ஆதரவை நிறுத்த முடியாது என வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். காஸாவில் உள்ள மக்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது, மேலும் UNRWA அங்குள்ள மிக முக்கியமான மனிதாபிமான அமைப்பாகும் என்று அவர் NTB க்கு அளித்த அறிக்கையில் கூறியுள்ளார். அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீதான தாக்குதலில் UNRWA ஊழியர்கள் ஈடுபட்டதாகக் கூறப்படும் அறிக்கைகள் ஆழ்ந்த வருத்தமளிப்பதாகவும், இந்த விவகாரத்தில் UNRWAஇன் விசாரணையில் நோர்வே சாதகமாக இருப்பதாகவும் வெளியுறவு அமைச்சர் Eide மேலும் கூறியுள்ளார்.

அதே வேளை பாலஸ்தீனிய அகதிகளுக்கான உதவிகளை ஐ.நா நிறுத்துவது, யுத்தத்தில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மில்லியன் கணக்கான மக்களுக்கு அளிக்கும் தண்டனையாகும் என பாலஸ்தீனப் பகுதிகளுக்கான ஐ.நா. சிறப்பு செயலாளர் Francesca Albanese தெரிவித்துள்ளார்.

# காஸாவின் குழந்தைகள்



காசாவில் 17,000 குழந்தைகள் நெருங்கிய உறவினர்களோ, பாதுகாவலர்களோ இல்லாதிருப்பதாக யுனிசேப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெற்றோர்கள் கொல்லப்பட்டதாலோ அல்லது வேறு வழிகளிலோ குழந்தைகள் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர், அவர்களுக்கு தேவையான பராமரிப்பாளர்கள் இல்லாமல் உள்ளனர் என்று ரொய்ட்டர்ஸ் தகவல் தெரிவித்துள்ளது.

நடைமுறையில் காசாவில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இப்போது உளநலப் பாதுகாப்பு தேவை என்றும் மேலும் இந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

குழந்தைகள் அதிகளவு பதட்டமடைவதாகவும், பசியின்றி காணப்படுவதாகவும், குண்டுவெடிப்புகளின் சத்தம் கேட்கும் ஒவ்வொரு முறையும் அவர்களால் தூங்க முடியாது தவிக்கின்றனர் என்றும் பாலஸ்தீனிய பிராந்தியங்களில் உள்ள யுனிசெப்பின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

போருக்கு முன், யுனிசேப் சுமார் 500,000 பாலஸ்தீனிய குழந்தைகளுக்கு மனநலப் பாதுகாப்பு மற்றும் உளவியல் ஆதரவு தேவை என்று மதிப்பிட்டது.

இன்று கிட்டத்தட்ட அங்குள்ள எல்லா குழந்தைகளுக்கும் இப்பாதுகாப்பு தேவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

# காவற்துறையின்

## அக்கறையீனத்தால் அநியாய உயிர்ப்பலி



வன்முறை எச்சரிக்கை குறித்து நோர்வேயில் காவல்துறை அதிக கவனம் எடுத்தல் அவசியம்.
புத்தாண்டு தினத்தன்று ஒஸ்லோவில் ராகவி வரதராஜன் (30) என்ற இளம்பெண் கார் ஒன்றில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் நோர்வேயில் மக்கள் மத்தியில் பெரும் அதிர்வினை ஏற்படுத்தியுள்ளது.

கொலைக்கு முன், குற்றவாளிஇளைஞன் ராகவிக்கு பலவழிகளிலும் வன்முறையினை பயன்படுத்தி உள்ளார். இதனை ராகவி தனது பகுதியிலுள்ள காவல்துறையினருக்கு பலதடவைகள் அறிவித்திருந்தும், காவற்துறை அவருக்கான வன்முறை தற்பாதுகாப்பு எச்சரிக்கைக்கான எலாமினை கொடுத்திருக்கவில்லை.

அதனை ராகவி பெற்றிருந்திருந்தால், அவர் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கலாம் என பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தனர். இவ்வாறான வன்முறைகள் இதற்குமுன்னரும் நடை பெற்றிருக்கிறது. ஆயினும் காவற்துறையினர் கருத்தில் கொள்ளவில்லை என ராகவியின் மரணத்தின் பின்னர் ஒஸ்லோ, பேர்கன் போன்ற நகர சபைகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கிறன.

# பிரார்த்தனை

லீனா மணிமேகலை



நீரின் பாதங்களைத் தேடியலைகிறேன்.
மடித்த வயிற்று சதைகளில்
அறையும் விநோத வேரின் வாசம்
என் பித்தை ஏற்றுகிறது.
காற்றில் நீந்தும் கூந்தலில் ஓராயிரம் மொட்டுகள்.
பற்களில் தேக்கியிருக்கும் விதைகளை உமிழ
கண்கள் எட்டிய தூரம் வரை நிலம் இல்லை.
மேகமூட்டமாயிருக்கிறது.
மலை தொடர்ச்சிகளை
ஒவ்வொரு கல்லாய் முகடாய்
என் ஓங்கார குரல் தேய நகர்த்துகிறேன்.
விண்கற்கள் விழுந்தவாறு இருக்கின்றன.
இடிமழையில் உயிரைப் பிழிந்து ஆடுகிறேன்.
உடல் உருகி
அசைய அசைய திசைகள் மின்னுகின்றன.
நிலவின் கறை படிந்த தோலோடும்
வண்ண வண்ண காயங்களோடும்
கண்ணீர் தேமல்களோடும்
எழுதா மையின் சாயத்தோடும் திரும்ப
ஒரேயொரு வீடு வேண்டி பிரார்த்திக்கிறேன்.

லீனா மணிமேகலை (Leena Manimekalai) தமிழ்க் கவிஞர், ஆவண, நிகழ்படக் கலைஞர், சமூகச் செயற்பாட்டாளர் போன்ற பன்முகங்களுடன் அறியப்படுகிறார். பெண்கள் உரிமைகள், பாலியல், சமூக ஒடுக்குமுறைகள், ஈழப் போராட்டம் உட்பட்டன இவரது கவிதைகளின் கருப்பொருள்களாக அமைகின்றன. இவர் தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மகாராஜபுரம் எனும் கிராமத்தில் பிறந்தவர். “மாடத்தி”, “செங்கடல்” போன்ற இவர் இயக்கிய திரைப்படங்கள் பன்னாட்டு கவனம் பெற்றிருக்கின்றன. பன்னாட்டு திரைப்பட விழாக்களிலும் இவரது படங்கள் திரையிடப்பட்டுள்ளன.


# அலைகளின் மீதொரு காலத்தின் பாடல்



இசை:
விக்னகுமார் மகேஸ்வரன்



விமர்சனம்:
மாலினி மாலா




பாடல்களுக்கு விமர்சனம் எழுதியும் விதந்துரைத்தும் சில காலமாகி விட்டது. விதந்துரைக்குமளவோ விமர்ச்சிக்குமளவோ அண்மைக்காலம் காதில் விழுந்த எந்தப் பாடலும் மனதைத் தொடவில்லை என்ற குறையைத் தீர்த்து மனதோடு பேசியிருக்கிறது அண்மையில் வெளியான கடலம்மா.

பாடல் வரிகள் குறிப்பிடும் இடங்களும் சம்பவங்களும் என் மனதுக்கு மிக நெருக்கமாக உணர்வதால், நினைவுகளைத் தூண்டுவதால், ஏங்க வைப்பதால், பாடலை விட என் இந்தப் பதிவு நீண்டு போகலாம். காரியமில்லை.



புகலிட நாட்டிலிருந்து தாயகம் செல்லும் ஒவ்வரு வருடமும் வெவ்வேறு தேடல்கள் இருக்கலாம். நான் போனதும் தேடி ஓடுவது கடல் மடியையும், வெண்மணல் வெளிகளையும், செழித்த வயல்களின் வரப்புகளையும் அடர்ந்த காடுகளையும் தான். தாயகம் போகும்வரை மனம் முழுவதும் அவைகளுக்கான ஏக்கமே நிறைந்திருக்கும். என் சிறுபராயத்தில் அவை மனம் நிறைந்த மகிழ்வை எனக்கு வாரி வழங்கியிருந்தன. அந்தப் பொச்சத்தின் எச்சத்தைத் தேடி ஓடும் எனக்கு இப்போதெல்லாம் எஞ்சுவது கண்ணைக் கரிக்கும் பெருமூச்சு மட்டுமே.



மனதின் ஏக்கத்தை, வெளிப்படுத்த முடியா அதன் தவிப்பை, ஒரு பாடலாய்க் கேட்க நேர்கையில் மனம் அப்படியே அதனுடன் ஒன்றித்து விடும். அப்படித் தான் கடலைம்மாவை அண்மையில் கேட்க நேர்ந்த போது மனம் விம்மியது.

ஒரு தாலாட்டின் மொத்த உணர்வையும், ஒரு ஆராரோ லயம் பிழிந்து தருவதுபோல, கடற்



பாடல்களுக்கென்றே பிரத்தியேகமானது ஏலேலேலேலோ... கடலின் மொத்த உணர்வையும் பிரதிபலிக்கும் சூட்சுமத்தை இந்த ஏலேலேலேலோ தனக்குள் பதுக்கி வைத்திருக்கின்றது என நான் நினைப்பதுண்டு.

இப்பாடலிலும், உயரும் அலைகளோடு உச்சஸ்யியில் தொடக்கி மெதுமெதுவாக அலைக-ளோடு இறங்கி மெல்லிய சோகமாய் மனதில் உட்கார்ந்து கொள்ள, பாடல் வரிவரியாய் அலைக-ளோடு வந்து மனதை இழுத்து அலைக்கழிக்கத் தொடங்குகிறது.

எனது சிறு வயதுகளில், ராவணன் மீசை நடனம் புரிந்த கிழக்கரியாலை மண்மேடுகளில் உருண்டு புரண்டு களித்திருக்கிறேன். ராவணன் மீசையைக் கைகளில் வைத்து ராவணனைக் கற்பனை செய்திருக்கிறேன். இன்றும் அந்தக் கரைகள் முழுதும் மலையென உயர்ந்த மண்மேடுகளையும், ராவணன் மீசையையும் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்துவிடும் ஆவலுடன் தேடி ஓடுகிறேன். மருந்துக்குத் தானும் அங்கே அவைகள் இல்லை. மண்மேடுகளைக் காவிக் கடத்திப் போன டிராக்டர் தடங்கள் மட்டுமே ஒரு கொலைபாதகனின் பாதங்கள் போல எஞ்சியிருக்கின்றன.



கவுதாரிமுனை, மண்ணித்தரை என குருமண் குன்றுகள் தேடி பயணம் தவறாது, ஓடுகிறேன். அவைகளில் நிறைந்திருந்த நாவல் மரங்களைத் தேடி பார்வையை விரித்து, பாலைகள் நின்ற இடங்களை நாவில் நீர் சுரக்க அண்ணாந்து, வெறும் வெறித்த பாலை நிலத்தைக் காண்பது போல ஏமாந்த என் போன்றவர்களுக்குத்தான் இந்தப் பாடல் சொல்லும் சோகத்தை முழுமையாக உள்வாங்க முடியும் என நினைக்கிறேன்.

பாடல் வெளிப்படையாகச் சொல்லும் சங்கதியை விட அது சொல்லாமல் பெருமூச்சு விடும் சங்கதி கனதியானது. அந்த இடங்களுக்குச் சென்று பார்க்கும்போது, இந்த இடங்களின் வரலாறுகளும் மண்ணின் வளமும் அறிந்த எவர்க்கும், மனதின் மீது கத்தியை வைத்து மெதுவாய் கோடிழுக்கும் கைமீறிய ஊமை வலியாய் அதை உணர முடியும்.

முழுவதும் வருமானத்துக்காய், கேளிக்கைக்காய், விலைபோய்விட்ட மண்ணில் இனி எப்போதும் காணவே முடியாத ஒரு காலத்தின் ஏக்கத்தை கடலம்மாவின் மடியில் பிழிந்து வைக்கிறது பாடல் என்பதால் என்னால் அதிகமாக அதற்குள் தொலைந்து போக முடிகிறது.

கூடவே, மனதில் உணர்வுகளை சோடனையற்றுப் பகரும் கவி வரிகள். பாடலின் உணர்வை அப்படியே உள்வாங்கி உருகிக் கரையும் பிசிறற்ற, தெளிந்த குரல், அதிராத இசை, கடலின் மடியில் தவழும் உணர்வு தரும் படப்பிடிப்பு என பாடல் பற்றி மனம் நிறைந்து கூற நிறைய உண்டு.

அதேபோல பொருந்தி வரவில்லையோ என்ற நெருடலும் சில விடயங்களில் உண்டு. பாடகரின்




இளைய குரலுக்குப் பொருந்தாத முதியவரின் வாயசைப்பு, சில இடங்களில் அவரின் வாய் அசையாமல் பாடல் மட்டுமே ஒலிக்கிறது. கடைற்கரையில் அபிநயம் புரியும் பெண். கடலில் அலைந்தும் நடந்தும் உட்கார்ந்தும் வெறிக்கும் இன்னோர் பெண். வர்கள் காட்சியில் ஏன் வருகிறார்கள் என்று தெரியவில்லை. எனது புரிதலில் இவர்கள்தான் பாடல் குறிப்பிடும் கடலைம்மாவாக இருக்கலாம் என நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரை, எனது இரசனையின் பிரகாரம், இந்தப் பாடலில் பலவீனமானவை இந்தக் காட்சிகள் என்பேன்.


நீருக்கு ஏது நிறம்?, அதற்கு ஏது வடிவம்? அப்படியே அதை அன்னையாக காட்சி முன்னிறுத்த விரும்பின், வண்ணங்கள் கலந்த புடவை வேண்டியதில்லை. நுரை மேவும் நிறத்தில் அதன் மீது மிதந்தலையும் முகம் காட்டா நிழல் ஒன்றே போதுமானது என்பது எனது அபிப்பிராயம். தற்போதுள்ள தொழில் நுட்பத்தில் அதை உருவாக்குவதும் கடினமல்ல என நினைக்கிறேன்.

கூடவே, கடலில், அதன் கரையில் நிகழும் மனிதர்களின் இயல்பான செயற்பாடுகள், அதனோடு ஒன்ற வைப்பது போல, கடலை வெறிக்கும் ஏக்கம் நிறைந்த ஒரு வெற்றுப் பார்வை போதும் பாடலில் உள்ள அத்தனை உணர்ச்சிகளையும் பிரதிபலிக்க என்பது என் அபிப்பிராயம்.

இங்கு குறை கூறுதல் எனது நோக்கமல்ல. ஒரு அருமையான பாடல் சில காட்சிகளின்இணைப்பால் ஓடியோவில் கேட்கும் போது தரும் நிறைந்த உணர்வை வீடியோவாகப் பார்க்கும் போது ஏற்படுத்தாமல் விட்டு விட்டது என்ற ஆதங்கமே.

இந்தப் பாடலைக் கேட்கும் பலரும் அதை உணரக் கூடும்.

தாலாட்டுதே வானம்..., ஓடம் ஒன்று..., ஆண்டவனில்லா உலகமிது..., வாடைக்காற்று வீசுகின்ற காலத்திலே... போன்ற காலத்துக்குக் காலம் வெளியான கடல் பாடல்களின் பட்டியலில் இந்தப் பாடலும் தனக்கான இடத்தைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தாலும் இந்தப் பாடலின் சம்பவங்களோடு உணர்வு ரீதியாக நெருக்கம் கொண்டோருக்கு இது ஒரு படி மேலே சென்று மனதில் அமர்ந்து ஒலிக்கும் என்றே நம்புகின்றேன்.




கடலாளே!
அடிக்கிற காற்றின் பக்கமெல்லாம்
அலையெறிந்து ஓடுவதை
சற்றே நிறுத்து.
சுட்டுவிரல் கொண்டு
காற்றில் கிறுக்கிய
வெறுங் கதைகளன்று நமது.
நெஞ்சைக் கிழித்தெறியும் உன்மத்தக்காற்றை
இருள்வெளியில்
அள்ளியென்மீது எறிந்துவிட்டு,
யாதொரு பாதகமும் அறியாததுபோல்
காலைப்பனியள்ளி
கைகழுவி எங்கேயடி செல்கிறாய்?
அழித்துப்போடவும் கிழித்தெறியவும் முடியாத
நினைவுகளின் மடிப்புகளை
அலையிடுக்குகளில் செருகி வைத்துவிட்டு
எல்லாம் முடிந்ததெனவாய்
முகம் மறைத்து
எங்கெலாம்தான் ஓடுவாய்.
முத்தங்களால் நனைந்துபோன
நமது
இரவு பகல்களின் பக்கங்களை
பின்னைய பொழுதுகளில் நாம்
சேர்ந்திருந்தே படித்தோம்.
உன்மேல் மிதந்தபடி நானும்
என்னை நனைத்தபடி நீயுமாக
மீண்டும் மீண்டும்
மீட்டெடுத்தோம் அவற்றை.
என்னை விடவும்
நீதான் அதிகமாகவே அவற்றை
அலைகளின் குரலெடுத்து
உரத்து வாசித்துக் காட்டுவாய்.
கடலாளே!
அத்தனை பக்கங்களையும்
ஒற்றைப்பொழுதில் அழித்தெறிந்து விட்டதாய்
நமது கரைகள் நீளமும்
பொய்களை விதைக்காதே.
நீ எழுதும் பொய்களை
உனது அலைகளே
வந்துவந்து அழித்துவிட்டுப் போவதை
கண்டுகொள்ளாத உன்னை
என்னவென்று சொல்ல..?!
உனது பேரலைகளைவிடவும்
அழுத்தமாகவே ஒன்றை மட்டும்
எச்சரிக்க விரும்புகிறேனடி.
மெத்தவும்
அதிகமாகவே என்னை
கோபங்
கொள்ளச் செய்கிறாய்.
என்னைக் கொல், அல்லால்
என்னால் கொல்லப்படு.

# ஏறோப்பிளேன் பறக்குது பார் வானத்து மேல

## சிறீலங்கன் எயர்லைன்ஸ் ஊழல் குற்றச்சாட்டுக்கள்

Mohamed Ali Yaseer Arafath





இலங்கையில் இடம்பெற்ற பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் technical correctness விடயத்தில் துல்லியமான தகவல்களை கொண்டதல்ல. ஆனால் சிறீலங்கன் எயர்லைன்ஸ் தொடர்பில் தற்போது ஒரு இரகசிய ஆவணம் வெளியாகியுள்ளது. தேசப்பற்று மிக்க திறைசேரி உப செயளாலர் (Deputy Secretary to The the Treasury) திரு.மு.சண்முகலிங்கம் அவர்கள் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு எழுதிய இரகசிய கடிதமே அந்த ஆவணம்.




கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் புள்ளியில் இருக்கும் இலங்கையில் முதலாவது Commercial Aviation சேவை 1946 இல் Air Ceylon ஆக ஆரம்பித்தது ஆரம்பத்தில் இலங்கை Australian National Airways உடன் இணைந்து லண்டன் - சிட்னி பாதையில் முக்கியமான தரிப்பிடமாக திகழ்ந்தது. எயார் சிலோனின் GSAஆக டச்சு விமான சேவை KLM விமான நிறுவனத்துடன் மிக நீண்டகால தொடர்பில் இருந்தது. ANA மற்றும் KLM எயார் சிலோனின் 45 சதவீதமான பங்குகளை வைத்திருந்தார்கள். British National Overseas Airways தற்போதைய British Airways இணைந்து மத்திய கிழக்கு இந்திய விமானப் போக்குவரத்து சந்தையில் கணிசமான அளவில் சேவையை வழங்கியது. Emirates, Qatar Airways இல்லாத காலத்தில் Air Ceylon ஒரு ஜாம்பவானாக இருந்துள்ளது. சீதா தேவி, சுனேத்தாரா தேவி, விஹார மஹாதேவி என்ற பெயர்களில் Douglas DC, Havilland, Lockheed விமானங்களில் அப்போது இருந்த Latest Model விமானங்களை வைத்து இயக்கியது.




இந்த விமான சேவை முறையான நீண்ட கால மூலோபாய திட்டமிடல் இல்லாமல் 1967 இல் ரத்மலானயில் இருந்து கட்டுநாயக்கவுக்கு மாற்றி தன் கணவன் பெயரை நிலைநாட்ட செய்த சிறீமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் அவரின் பொருளாதார கொள்கைகள் காரணமாக பாரிய பாதிப்பிற்கு உள்ளானது. புதிதாக உருவாக்கப்பட்ட சிங்கப்பூர் எயர்லைன்ஸ் போன்ற நிறுவனங்களுடன் போட்டியிட முடியாது திணறியது. ஜே ஆர் தனது பெயரை வரலாற்றில் பதிக்க புதிய விமான சேவையை ஆரம்பிக்க நினைத்து அதற்கு சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ விடம் ஆலோசனை கேட்டார். அப்போது சிங்கப்பூர் எயர்லைன்ஸ் உலகப் பிரசித்தி பெற்ற நிர்வாகி JY பிள்ளை அவர்களின் மிகச் சிறந்த வழிகாட்டலில் ஒரு தரமான சேவையாக மாறியது.



ஆரம்பத்தில் சிங்கப்பூர் இலங்கைக்கு வழிகாட்டல்களை வழங்கியது ஜே ஆர் எயார் லங்காவை ஆரம்பித்தபோது அதற்குத் தலைவராக சிங்கப்பூர் எயர்லைன்ஸில் பைலட்டாக பணியாற்றிய அவரது உறவினர் கப்டன் ரகித்த விக்ரமநாயக்கவை அதன் தலைவராக நியமித்த போது லீ குவான் யூ ஜே ஆரிடம் How could an airline pilot run an airline? என நேரடியாக கேட்ட கேள்விக்கு ஜே ஆரிடம் பதில் இல்லை. Fiscal Discipline மற்றும் Integrity உயிர் மூச்சாக கொண்டு இயங்கும் சிங்கப்பூர் எயர்லைன்ஸ் அதன் பிறகு மெதுவாக எயார் லங்கா விடயத்தில் இருந்து ஒதுங்கி கொண்டது. ஆரம்பம் முதல் ஊழலில் திளைத்த எயார் லங்கா பல விசாரணை குழுக்கள் அமைத்து ஒரு பிரயோசனமும் இல்லை காரணம் இவை அனைத்தும் நடுத் ஹாமதுருவகே படுத் ஹாமதுருவகே வகையறா விசாரணைகள் ஊழல் செய்தவனே விசாரணைக் குழுக்களை அமைத்தால் எங்கே நீதி கிடைக்கும்?



இப்போது ஜே ஆருக்கு அடுத்த ஜனாதிபதியாக வந்த ரணசிங்க பிரேமதாசா எயார் லங்காவை உச்சகட்ட துஷ்பிரயோகம் செய்த ஆசாமி. பிரேமதாச ஒரு முறை சிம்பாப்வே கொமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்ள செல்ல லண்டன் செல்லவிருந்த விமானம் ஹராரேக்கு டைவர்ட் செய்து பயணிகளை கனக்டிங் பிளைட் கிடைக்காமல் தவிக்க விட்டார்கள்.

அப்போதெல்லாம் லீ குவான் யூ பயணிகளுக்கு எதுவிதமான பாதிப்பும் இன்றி இலங்கை ஊடாக 54 தடவைகள் டிரான்ஸிட் பயணியாக ஐரோப்பா மத்திய கிழக்கு சென்றிருந்தார். சிம்பாப்வே விடயம் சர்ச்சையாக மாறிய பிறகு ஒன்றுக்கும் லாயக்கில்லாத கொபெல்ஸ் மக்கியவல்லியை பின்பற்றிய உக்கிய வல்லி பிரேமதாச வெளிநாடுகளுக்கு செல்லும் போது அதற்கு பின்னால் மேலதிகமாக இன்னும் ஒரு Uncharted Ferrying Flight ஒன்றை கொண்டு சென்று தனது நிறைவேற்று அதிகாரத்தின் கெத்தை காட்டி நாட்டு மக்களின் சொத்தை ஆட்டையை போட்டார்.

இதன் உச்சகட்டமாக ஜனாதிபதி பயணிக்கும் போது அது Scheduled Visit ஆயின் எயார்லங்கா அந்த ரூட்டில் 72 மணிநேரம் தனது Sales அனைத்தையும் Freeze செய்து நிறுத்தும் Unscheduled ஆயின் பிஸ்னஸ் கிளாஸ் பயணிகளுக்கு ஒரு இலாபகரமான offer வழங்கப்படும் அதாவது வேறொரு நாளில் பயணம் அத்துடன் அதே பாதையில் பிஸ்னஸ் கிளாஸ் மேலதிக இலவச டிக்கெட் எனவே அனைவரும் ஒரு இலவச பிஸ்னஸ் கிளாஸ் பயணத்திற்காக அதை தெரிவு செய்ய ஜனாதிபதி மற்றும் பரிவாரங்களுடன் பிஸ்னஸ் கிளாஸ் ஆக்ரமிக்கப்படும்.

சில வேளைகளில் 72 மணித்தியாலங்கள் வரை இவர்கள் சொப்பிங் முடிக்கும் வரை மூன்று நாட்களுக்கு விமானங்கள் முடக்கப்பட்டுள்ளது. அதற்குத்தான் அந்த 72 மணிநேரம் Sales Freezing. இதன் இன்னொரு உச்ச கட்ட வடிவம் மஹிந்த ராஜபக்ஷ தனது மைத்துனர் நிசாந்த விக்ரமசிங்க (அதாவது ஜெ ஆர்/ரகித விக்ரமநாயக்கவின் உறவினர்) காலத்தில் நிகழ்ந்தது.

மலேசியா கோலாலம்பூரில் இருந்து KL-CMB நேரடி விமானம் சிங்கப்பூரில் நிசாந்த மற்றும் ஒரு கபினட் அமைச்சர் ஏற Reroute செய்தமை, கொமன்வெல்த் விளையாட்டு பயணங்களில் தனியாக chartered செய்யப்பட்டு மேற்கிந்தியத் தீவுகள் பயணம், விமானிகள் Cockpitஇல் லண்டனில் இருந்து நாய்க்குட்டி கொண்டு வந்தமை. அத்துடன் Emirates பீட்டர் ஹில் உடன் ஏற்பட்ட சர்ச்சை அதன்பிறகு எமிரேட்ஸ் வெளியேறிய பிறகு பல பில்லியன் ரூபாய் மக்கள் வரிப்பணத்தை வானத்தில் புகையாய் விடும் நெஷனல் கரியராக மாறியமை தொடர் வரலாறுகள்.

இறுதியாக சண்முகலிங்கம் அவர்களின் கடிதத்தில் திறைசேரி அழைப்பின் பெயரில் ஐந்து Airbus 320 ரக விமானங்களை நீண்ட கால குத்தகை எடுப்பது தொடர்பாக லண்டன் லொயிட்ஸ் வங்கியில் இருந்து வந்த வங்கி அதிகாரி திறைசேரியில் நடந்த மீட்டிங் இல் எயார் லங்கா அப்போதைய Finance manager சண்முகலிங்கம் மற்றும் லண்டன் வங்கி அதிகாரியை பார்த்து அந்த டீல் நாங்கள் ஏற்கனவே முடித்துவிட்டோம் எங்களுக்கு 8.9 சதவீதம் வட்டியில் ஒரு மூன்றாம் தரப்பின் கடன் கிடைக்கிறது என்று தெரிவிக்க திகைத்து போன சண்முகலிங்கம் மற்றும் லொயிட்ஸ் வங்கி அதிகாரி நாங்கள் இந்த credit facility 6.5 சதவீத வட்டியில் நாங்கள் வழங்குவோம் என்று கூற, அதை நிராகரித்து எயார் லங்கா பிரதம நிதி அதிகாரி நாங்கள் இதை முடித்து விட்டோம் நீங்கள் போகலாம் என்ற வகையில் பேச, சண்முகலிங்கம் திரைசேரிக்கு தெரியாமல் எவ்வாறு இந்த முடிவை எடுக்கலாம் என்று ஆட்சேபனை தெரிவிக்க கருத்து முரண்பாடு ஏற்படுகிறது.

லண்டன் அதிகாரி தொடர்ந்து டீலை நீங்கள் முடித்தால் என்ன கூந்தலுக்கு என்னை வர வைத்தீர்கள் என்ற தொனியில் உரையாட அவரை சண்முகலிங்கம் சமாதானம் செய்ய நேர்ந்த போது இன்னும் பல தகவல்கள் வெளியானது. லொயிட்ஸ் வங்கி வியட்நாம் தேசிய சேவைக்கு 6.5 சதவீதம் வட்டிக்கு அதே Airbus A320 விமானத்தை 66 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒரு விமானம் வீதம் இரண்டு விமானங்களுக்கு வழங்கியுள்ளது.

ஆனால் எயார் லங்கா தகவல் படி 8.95 சதவீத வட்டியில் அதே விமானம் 96 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்டத்தில் 3.45 மேலதிக வட்டிக்கு பெறப்படுள்ளது இதனால் வட்டி இல்லாமல் நேரடியாக ஐந்து விமானங்களுக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அப்போதைய நாணயமாற்று படி 750 கோடி (தற்போதைய நிலையில் 4800 கோடி) இலங்கை ரூபாய் மக்கள் பணத்தை வீணாகப்போகிறது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தை அடுத்து அந்த பதவியிலிருந்து சண்முகலிங்கம் தூக்கி வீசப்படுகிறார். பல்வேறு குற்றச்சாட்டுகள் அவமானங்களுடன் அந்த நேர்மையான அதிகாரி காயப் படுத்தப் படுகிறார். இறுதியில் அந்த நேர்மையான அதிகாரி ஒரு வசனம் அந்த கடிதத்தில் எழுதுகிறார் இந்த குற்றத்தில் இருந்து இங்கே நீங்கள் தப்பலாம் ஆனால் கடவுளின் பிடியில் இருந்து தப்ப முடியாது. இந்த டீலை அனுபவிக்க பிரேமதாசவுக்கு கொடுப்பினை இல்லை. அடுத்து வந்த டீபி விஜேதுங்க மற்றும் சந்திரிக்கா குமாரதுங்க காலத்தில் இந்த டீல் எதுவிதமான குளறுபடி இன்றி ஓடி இன்றும் இலங்கை மக்கள் இதன் வட்டியை கட்டுகிறார்கள் 1979 இல் சிறீலங்கன் எயர்லைன்ஸ் ஆரம்பித்த காலத்தில் இருந்து மக்கள் வரிப்பணத்தின் 9% சதவீதத்தை எந்தவித தயவு தாட்சண்யம் இன்றி இந்த ஜே ஆரின் கனவு சிறீலங்கன் எயார்லைன்ஸ் ஏப்பம் விட்டுள்ளது.

# புதிய கலைக்கூடத்திற்கான அடிக்கல் நாட்டு!



கிளிநொச்சியில் திருமறைக் கலாமன்ற வளாகத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள நுண்கலைகள் பயிலக கலைக்கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு திருமறைக்கலாமன்ற உதவி நிர்வாக இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரிபன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

கனடா நாட்டில் வாழ்ந்துவரும் திரு. கமலநாதன் அவர்களின் அனுசரணையில் ஜீவ ஊற்று அறக்கட்டளை நிறுவனத்தின் கட்டுமானப்பணியில் அமையப்பெறவுள்ள இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை அருட்தந்தை அன்ரன் ஸ்ரிபன் அவர்கள் நாட்டிவைத்தார்.



# செம்பாத்தாள்

## கூத்துருவ நாடகம்



யாழ்பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை, பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னலோடு இணைந்து நடத்திய இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு கடந்த 1ஆம், 2ஆம் திகதிகளில் யாழ்,பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றபோது திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும், நிறைவு நிகழ்வாக திருமறைக் கலாமன்றத்தின் புதிய தயாரிப்பான **"செம்பாத்தாள்"** கூத்துருவ நாடகமும் இடம்பெற்றன.

ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிராந்தியத்தின் தென்னமரவடி பிரதேசத்தை ஆண்ட வீர வன்னிச்சியான செம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளிலிருந்து கூத்துருவநாடகமாக எழுதித்தயாரிக்கப்பட்ட அந்நாடகம் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களையும்பெற்றது



# பாபர் மசூதியும், ராமர் கோயிலும்

## சொல்லவரும் அரசியல்



M.A.Y.**அரபாத்**

மிகவும் sensitivவான உணர்வுபூர்வமான ஒரு விடயமாக தற்போது அயோத்தியில் ராமர் கோவில் திறப்புவிழா நடந்தேறியிருக்கிறது.
இது நிச்சயமாக ஒரு பாரிய அரசியல் காய்நகர்த்தல் என்பது மிகவும் வெளிப்படையானது. எனவே இதிலே பல்வேறு தரப்பிலும் வித்தியாசமான பார்வைகள் இருப்பது இயற்கையானது. வரலாற்றில் எங்கோ இழைக்கப்பட்ட தவறு எங்கோ தாக்கத்தை ஏற்படுத்தும், அதுவே இந்த விவகாரத்திலும் நிகழ்ந்துள்ளது.

முதலாவது விடயம் பாரத தேசம் வரலாறு நெடுகிலும் Iconoclast அடையாள அழிப்பை சந்தித்தே வந்துள்ளது. வேதங்களில் இருந்து பௌத்தத்தை தழுவிய போது வேத ஆலயங்கள் அழிக்கப்பட்டன. ஏன், பௌத்த தேரவாத மஹாயான வஜ்ராயன துணைப் பிரிவுகள் (denominations)கூட தங்களுக்குள் Iconoclast செய்து வன்மத்தை தீர்த்தார்கள். அநுராதபுர யுகத்தில் மகாசேனன் மரணத்தின் பின் பத்தாயிரம் மஹாயான பிக்குகளை உயிருடன் கொழுத்தி மஹாவிகாரையை தரைமட்டமாக்கி தேரவாத பௌத்தம் இலங்கையில் முடிசூட்டிக்கொண்டதுகூட வரலாற்றில் மறைக்கப்பட்ட பக்கங்களே.

இந்தியாவின் சிக்கலான புவிசார் அரசியல் களத்தில் வரலாறு நெடுகிலும் இதைவிட சிக்கலான சம்பவங்கள் நிகழ்ந்தன. இதில் குப்தர்களின் அந்திம காலத்தில் ஹிந்து மத Revival இடம்பெற்ற போது மீண்டும் பௌத்த ஆலயங்கள் அழிக்கப்பட்டன. எனினும் ஒப்பீட்டளவில் மௌரியர்களை விட குப்தர்கள் சகிப்புத்தன்மை மிக்கவர்கள்.

பாரத தேசத்தில் இடம்பெற்ற முதலாவது மத்திய ஆக்ரமிப்பு இஸ்லாமியர்களது அல்ல கிரேக்க பக்ட்ரியன், குஷான், பார்சி பாரசீக, திபெத்திய ஆக்ரமிப்பு கூட வட இந்தியாவில் வெவ்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்துள்ளது. அதைத் தவிர மத்திய ஆசியாவில் இருந்து காலாகாலமாக நடந்த இடம்பெயர் காரணமாகவே இந்தியாவில் பிராமணர் மற்றும் பார்சி சமூகங்கள் உருவானது. இவற்றில் மத்திய ஆசிய ஷஹன் மக்களின் ஆக்கிரமிப்பின் போதும் அதற்கு பிந்தைய பாரசீக மத்திய ஆசிய



முஸ்லிம் அரசுகளின் ஆக்ரமிப்பின் போதும் மிக உச்ச கட்ட Iconoclast சம்பவங்கள் நடந்தேறின. இவையே வரலாற்று உண்மைகள்.

எனவே முஸ்லிம்கள் வீணாக இந்த பாரசீக மத்திய ஆசிய மன்னர்களை புனிதர்கள் ஆக்க தேவையில்லை. பாபர் மசூதியின் நிலப்பரப்பில் செய்யப்பட்ட அகழ்வில் பாபர் மசூதி கட்டப்பட்ட நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அங்கு ஒரு இஸ்லாமிய அடையாளம் அல்லாத சிலைகளை கொண்ட ஆலயம் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவே மீர் பாகி பாபர் மசூதியை இராமர் கோவிலை உடைத்து கட்டியமைக்கு substantial evidence எதுவுமில்லை.

அதேவேளை ராம ஜென்ம பூமி என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆனால் அதைவைத்து அரசியல் செய்வதும் அபத்தமான விடயம். இந்த விடயத்தில் தொழில்நுட்பம் சிறந்த தீர்வை வழங்கியிருக்கும். வரலாற்று அடையாளமான பாபர் மசூதியை Iconoclast செய்யாது வீணான மதக் கலவரங்களை ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான மனிதர்களை கொல்லாது வன்முறையற்ற வழியில் முஸ்லிம் சமூகத்தின் அனுமதியுடன் அதை அழகாக ராம ஜென்ம பூமி எனப்படும் அந்த 2.7 ஏக்கரில் இருந்து Hydrolic Structural Relocation பொருத்தமான இடத்திற்கு நகர்த்தியிருக்கலாம்.

இராமர் கோயிலும் பாபர் மசூதியும் அருகருகே இருக்கும் ஒரு ஒற்றுமையான பலமான அழகான இந்திய தேசத்தின் அடையாளமாக அது மாறியிருக்கும். ஆனால் துரதிரஷ்டவசமாக ஆதிக்கம் அதிகாரம் சார்ந்த வரம்பு மீறல்கள் சம்பிரதாய மீறல்களுடன் கசப்புணர்வு வெறுப்புணர்வுடன் இந்த ராமர் கோயில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாடு Territorial Integrity என்பது வெறுப்பின் அடிப்படையில் கட்டமைக்கபடக் கூடாது அது ஒற்றுமையின் அடிப்படையில் உருவாக வேண்டியது அதன் பொறுப்பு இந்துக்கள் முஸ்லிம்கள் இரண்டு தரப்பிற்குமுண்டு. எனவே இந்த Status Quoவை ஏற்று நடைமுறை யதார்த்தங்களை ஏற்று முஸ்லிம்கள் விட்டு கொடுத்து போவதும் நிகழ்ந்த கசப்பான சம்பவங்களுக்கு இந்துக்கள் நடந்தது நடந்து போய்விட்டது மன்னிச்சிடு மச்சான் என்று முஸ்லிம்களை அரவணைப்பதுவுமே இதற்கான நிரந்தர தீர்வு.

அப்போது இராமர் கோயில் ஒற்றுமையின் அடையாளமாக மாறும். தீய மத அரசியல் குறுகிய கால அடிப்படையில் இந்துக்களின் வெற்றியாக தோன்றினாலும் நீண்ட கால அடிப்படையில் இந்தியாவின் அத்திவாரத்தையே அழித்துவிடும் இதை இந்திய மீதேசியவாதம் (Ultra Nationalism) உணர்ந்து செயல்பட வேண்டும். முஸ்லிம்களின் இந்த விடயத்தில் சகிப்புத்தன்மையுடன் செயல்பட வேண்டும்.

ராமர் கோவில் போறவன் வாரவன் எல்லோருக்கும் சங்கி முத்திரை குத்தி முகநூலில் சமூகவெளியில் சர்ச்சைகளை உருவாக்கி வீண் சண்டை போடத் தேவையில்லை. அன்று கூட பாபர் மசூதி உடைப்பின் போது அதிகளவில் வன்முறை நடந்தது எங்கேயோ இருக்கும் பம்பாயில். முதலையும் மூர்க்கனும் கொண்டதுவிடா என்று நின்றால் இந்த உலகில் புற்பூண்டும் எஞ்சாது. இந்த உலகில் நீதியை நிலைநாட்ட எல்லோருக்கும் பொதுவான எல்லாம் வல்ல இறைவன் போதுமானவன்.

## இலங்கை 75:

# தேசியக்கொடியின் கட்டுக்கதைகள் - 3

தெ.ஞாலசீர்த்தி மீனிலங்கோ



**இன்று இலங்கை பயன்படுத்துகின்ற தேசியக்கொடியில் வாளேந்திய சிங்கம் இருப்பதற்கான வரலாற்றுக் காரணங்களாகச் சொல்லப்படுபவை இரண்டு. முதலாவது, விஜயன் இலங்கைக்கு வரும்போது கொண்டுவந்த கொடியில் சிங்கம் இருந்தது என்பது. இந்தக் கட்டுக்கதையை ஏலவே இத்தொடரில் அம்பலப்படுத்தியாயிற்று. இரண்டாவது, 1815இல் பிரித்தானியர் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றியபோது கண்டி இராச்சியத்தின் கொடி இறக்கப்பட்டு பிரித்தானியக் கொடி - யூனியன் ஜாக் - ஏற்றப்பட்டது. அப்போது இறக்கப்பட்ட கொடியில் வாளேந்திய சிங்கம் இருந்தது. இக்கட்டுக்கதை குறித்து இக் கட்டுரையில் நோக்கலாம்.**

குறித்த நிகழ்வு 1815ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. இந்நிகழ்வு குறித்த பல்வேறு வடிவங்கள் உள்ளன. அதில் பிரபலமானதும் நன்கறியப்பட்டதும் யாதெனில், கண்டி முழுமையாகக் கைப்பற்றப்பட்டு கண்டிய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறித்த தினம் பிரித்தானியர்களால் சிங்கக் கொடி கீழே இறக்கப்பட்டு பீரங்கி வேட்டுக்களுடன் யூனியன் ஜாக் ஏற்றப்படுகிறது. இச்செயல் சிலருக்குத் தவறாகத் தெரிந்தது. கண்டிய பிரதானிகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னரே "மார்ச் 10ம் திகதியே ஒப்பந்தம் இறுதிப்படுத்தப்பட்டது" யூனியன் ஜாக் ஏற்றப்பட்டது சட்டவிரோதமானது என்று அவர்கள் நினைத்தார்கள். இதில் கலந்து கொண்டிருந்த மகாசங்கத்தினருக்கு மிகுந்த அதிருப்தி ஏற்பட்டது. இந்நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்தோரிடமிருந்து ஒரு பௌத்த துறவி வெளிப்பட்டு வந்து அங்கு நின்றிருந்த பிரித்தானியத்




தளபதியிடம் "உங்கள் கொடியை இங்கு ஏற்றுவதற்கு உங்களுக்கு அனுமதி வழங்கியது யார்?" என்று கேட்டார். துணிச்சலான இந்தத் துறவி பின்னர் யூனியன் ஜாக்கை கீழே இழுத்து, மிதித்து அதன் இடத்தில் சிங்கக் கொடியை ஏற்றினார். இது இன்றுவரை தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வருகின்ற முக்கியமான ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

குறித்த பௌத்த துறவியின் பெயர் வாரியபொல சுமங்கல. இவர் கண்டியில் உள்ள அஸ்கிரிய மடாலயத்தைச் சேர்ந்த நன்கு அறியப்பட்ட பௌத்த துறவி. பிரித்தானியரை எதிர்த்த இந்தத் துணிச்சலான வீரனுக்கு இப்போது தலதா மாளிகையின் வளாகத்திலேயே சிலை வைத்து கௌரவிக்கப்படுகிறது. 1985இல் குறித்த நிகழ்வின் 170வது நினைவுதினத்திற்கு முத்திரையும் வெளியிடப்பட்டது. ஆனால் வாரியபொல சுமங்கலவின் மேற்குறித்த செயல் பற்றிய செய்தியில் துளியும் உண்மை இல்லை. இதை மிகவும் விரிவாக ஆதாரங்களோடு The Doomed King: A Requiem for Sri Vikrama Rajasinha என்ற தனது நூலில் கணநாத் ஒபயசேகர விளக்குகிறார்.

கணநாத் ஒபயசேகர எழுப்புகின்ற முதலாவது கேள்வி, பிரித்தானியர்கள் தங்கள் கொடியை அவமதிக்க அனுமதித்திருப்பார்களா? குறிப்பாக மிக நீண்டகாலப் போராட்டத்திற்குப் பிறகு கண்டியைக் கைப்பற்றி முழுமையான கட்டுக்குள் கொண்டுவந்துள்ள நிலையில் இது சாத்தியப்பட்டிருக்காது. குறித்த நிகழ்வு பற்றிய எதுவித குறிப்புகளும் அக்கால நிகழ்வுகளைப் பதிந்த பிரித்தானிய, சிங்கள பதிவுகளில் இல்லை. 1815 மார்ச் இரண்டாம் திகதி நடைமுறைக்கு வந்த கண்டிய ஒப்பந்தம் மற்றும் மார்ச் 10ம் திகதி நடைபெற்ற கைச்சாத்திடும் நிகழ்வு ஆகியன விரிவாகப் பதிவிடப்பட்டுள்ளன. அதன்படி மார்ச் 10ம் திகதியே இந்நிகழ்வு பொதுமக்களுக்கான நிகழ்வாக நடாத்தப்பட்டது. அதில் நாட்டின் பிற பகுதிகளில் இருந்து தலைவர்களும் பொதுமக்களும் அனுமதிக்கப்பட்டனர். அன்று மட்டுமே பௌத்த துறவிகள் அழைக்கப்பட்டனர். எனவே 2ம் திகதி மகாசங்கத்தினர் இருந்தனர் என்பது தவறானது என்று கணநாத் ஆதாரங்களின் வழி நிறுவுகிறார்.

இந்தக் கட்டுக்கதையின் சிறப்பு யாதெனில் வழமையாக நிகழ்வது போல இல்லாத ஒரு நபரை வைத்து கற்பனையாகக் கதையை உருவாக்காமல் உண்மையில் வாழ்ந்த பிரபலமான ஒரு துறவியின் வழியே இது கட்டமைக்கப்பட்டுள்ளது. வரியாபொல சுமங்கல ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் நம்பிக்கைக்குரியவராக இருந்தார். மன்னரால் தலதா மாளிகையில் நிர்வாகப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 1815ம் ஆண்டுக்குப் பிறகும் இப்பொறுப்பில் அவர் தொடர்ந்து இருந்தார் என்பதை பி.ஈ. பீரிஸ் தனது நூலில் பதிவு செய்துள்ளார். தங்களது கொடியை அவமதித்த ஒருவரை இவ்வாறு தலதா மாளிகையில் நிர்வாகப் பொறுப்பில் தொடர்ந்தும் ஈடுபட பிரித்தானியர்கள் அனுமதித்திருப்பார்களா?

இந்தப் பிரபலமான கற்பனைக் கதை இரண்டு விடயங்களை நிறுவுவதற்குப் பயன்பட்டது. முதலாவது, கண்டிய மன்னனின் கொடி சிங்கக் கொடி. இரண்டாவது, நாட்டின் மிகப்பெரிய தேசப்பற்றாளர்கள் பௌத்த துறவிகள். இதன் தொடர்ச்சியிலேயே சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் தன்னைப் பேரினவாத அகங்காரமாக வெளிக்காட்டியது.

இந்தக்கதையின்படி ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் கொடி சிங்கக் கொடியாகும். ஆனால் கண்டி இராச்சியத்தின் கடைசிக் காலங்களில் எழுதப்பட்ட கவிதைகளில், காவியங்களில் இதுகுறித்த எதுவித குறிப்புகளும் இல்லை. உதாரணமாக பிரித்தானியருடனான சண்டையை முழுமையாகப் பதிவு செய்கின்ற இங்கிறீசி சட்டன (ஆங்கிலேயருடனான போர்) அரசனின் வீரத்தைப் போற்றுகிறது. அது அரசரை பயமற்ற சிங்கத்துடன் ஒப்பிடும் எந்தக் குறிப்பும் இல்லை. சிங்கக்கொடியை ஏந்திச் சென்றதற்கான எந்தத் தகவலும் இல்லை. இங்கிறீசி சட்டன 1803 மற்றும் 1804ம் ஆண்டு பிரித்தானியருடனான கண்டி இராச்சியத்தின் போர் வெற்றிகளைப் பாடுகிறது. இப்போர்களில் வெற்றியடைந்த சிங்கள வீரர்கள் கொடிகளை அசைத்து வெற்றியைக் கொண்டாடியதாக இக்காவியம் சொல்கிறது. ஆனால் எந்தவிடத்திலும் அது சிங்கக் கொடி என்று சொல்லவில்லை. இது மிகவும் முக்கியமானது.



இந்தக் கவிதைகளில் சிங்கக் கொடி பற்றிய குறிப்புகள் இருப்பதாக ஈ. டபிள்யு. பெரேரா தனது நூலில் பதிவு செய்கிறார். ஆனால் பெரேரா சொல்கிறபடியான குறிப்புகள் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை கணநாத் ஒபயசேகர சுட்டுகிறார். ஈ. டபிள்யு. பெரேரா சிங்கக்கொடி என்ற கதையாடலில் முக்கிய பங்காற்றியவர். அவரது Sinhalese Banners and Standards என்ற நூலில் இருந்தே சிங்கக்கொடி குறித்தான கதையாடலுக்கு மீளுயிர் கிடைத்தது.

பி.ஈ. பீரிஸ் கண்டி இராச்சியத்தின் கடைசிக்காலம் பற்றிய தனது Tri Sinhala என்ற நூலில் கொடிக்கு என்ன நடந்தது என்பது பற்றிய ஒரு குறிப்பைத் தருகிறார். கண்டியை பிரித்தானியர் கைப்பற்றும் போது ஆளுனராக இருந்த ரோபேர்ட் பிரவுண்றிக் கண்டியை கைப்பற்றியதன் நினைவாக இறக்கப்பட்ட கண்டிக் கொடியை தனது மகனிடம் கொடுத்து அதை பிரித்தானிய இளவரசரின் காலடியில் வைக்க உத்தரவிட்டார். இதை பிரித்தானிய கொலனி அரசாங்கக் குறிப்புகளில் இருந்து தெரிந்துகொண்டதாக பி.ஈ. பீரிஸ் குறிப்பிடுகிறார்.

இந்தக் குறிப்புக்குப் பிறகு கொடி தொடர்பான கதை மீண்டும் 1908இல் தொடங்குகிறது. ஈ. டபிள்யு. பெரேரா மாணவராக இலண்டனில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது கண்டியின் கொடியை தேடும் முயற்சியில் ஈடுபடுகிறார். நீண்ட தேடலின் பயனாக 1908இல் பிரித்தானிய இராணுவ வீரர்களுக்கான ஓய்வு இல்லமான செல்சியா மருத்துவமனையின் பெரிய மண்டபத்தில் மூன்று இலங்கைக் கொடிகள் மற்றைய பதாகைகளுடன் தொங்குவதை அவர் கண்டார். மூன்றும் மோசமாக சிதிலமடைந்திருந்தன. இரண்டு முழுமையாக சிதைந்திருந்தது. எஞ்சிய மூன்றாவது கொடி அடையாளங்காணக் கூடியதாக இருக்கிறது. பெரேராவுடன் இலண்டனில் கல்வி கற்றுக்கொண்டிருந்த டீ.ஆர். விஜயவர்த்தன ஒரு ஓவியக்கலைஞருக்குப் பணம் கொடுத்த குறித்த கொடியை படமாக வரைவித்தார். அப்படமே 1916ம் ஆண்டு வெளியான பெரேராவின் நூலில் இடம்பெற்றது. அதன் அடிப்படையிலேயே சுதந்திரத்தின் போது சிங்கக்கொடியைத் தேசியக் கொடியாக பிரகடனப்படுத்தினார்கள்.

கணநாத் எழுப்பும் கேள்வி யாதெனில், அது ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனின் கொடி என்பதற்கு என்ன ஆதாரம் எதன் அடிப்படையில் ஈ. டபிள்யு. பெரேரா அதை இராஜசிங்கனின் கொடி என்று முடிவு செய்தார். குறிப்பாக கண்டி இராச்சிய காலம் தொடர்பான குறிப்புகளில் சிங்கக்கொடி பற்றிய குறிப்பே இல்லாமல் இருக்கின்ற போது எவ்வாறு ஒரு சிங்கக்கொடி ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனின் கொடியாக இருக்க முடியும்? கண்டி அரசர்களும் ஏனைய அரசர்களும் பல அரச சின்னங்களைப் பயன்படுத்தினார்கள். அதில் சிங்க முடி, தங்க வாள் என்பனவும் அடங்கும். ஆனால் வாளேந்திய சிங்கம் தான் கண்டிய மன்னனின் உத்தியோகபூர்வக் கொடி என்பதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. ஈ. டபிள்யு. பெரேரா தனது நூலிலேயே சிங்கக் கொடியை பலர் பலவகைகளில் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதையும் பதிவு செய்கிறார்.

இந்தக் கொடிகளைப் பார்வையிட்ட இன்னொரு நபர் பிஷப் எட்மண்ட் பீரிஸ். அவர் மூன்று கொடிகளும் அடையாளங் காணவியலாதளவு வெளிறிப் போயிருந்ததாகவும் அக்கொடிகளின் கீழ் எழுதப்பட்டிருந்த குறிப்புகளை வைத்தே அவற்றை அடையாளங் காண முடிந்ததாகத் தெரிவித்துள்ளார். முக்கியமான அங்கு வைக்கப்பட்டுள்ள சின்னங்கள், கொடிகள் ஆகியவற்றின் வண்ணப் படங்களைக் கொண்ட பதிவுகளையும் அவர் பார்வையிட்டுள்ளார். அதன்படி குறித்த மூன்று கொடிகளின் வண்ணப்படங்கள் அங்கிருந்தன. ஆனால் அவற்றை ஒதுக்கிவிட்டு மங்கிய கொடியை மீண்டும் படமாக வரைந்ததும் அதனைக் கண்டி இராச்சியத்தின் கொடி என அழைத்ததும் பல கேள்விகளை எழுப்புகின்றன. மேலும் வாளேந்திய சிங்கக் கொடியின் வரலாறு எவ்வாறு கட்டுக்கதைகளால் நிறைந்தது என்பதையும் காட்டி நிற்கின்றது.

இங்கு எழுகிற கேள்வி, சிங்கம், வாள், வாளேந்திய சிங்கம் என்ற கருத்துருவாக்கம் உண்மையில் எப்போது இலங்கையில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதைச் சரிவர விளங்கினால் தேசியக் கொடியின் ஏனைய கதைகளையும் விசாரித்தறியலாம். அவற்றை அடுத்த கட்டுரையில் பார்ப்போம். ■




தொடர்ந்து நடந்தோம்.
எனது இடதுகரத்தைப் பற்றியிருந்த இளவரசி நேமியின் வலக்கரம் சில்லிட ஆரம்பித்ததை உணர்ந்தேன்.
"உனக்குக் குளிர்கிறதா நேமி?"
"ஆமாம், மெல்லியதாக"
"போர்த்திக்கொள்" எனது பருத்திப் போர்வையால் அவளைப் போர்த்தி விட்டேன்.
நன்றியோடு சிரித்தாள்.
"சற்று ஓய்வெடுக்கலாமா?"
"ஓய்வெடுத்தால் தேகத்தின் சூடு தணிந்து, குளிர் அதிகமாகத் தாக்கும் தெரியாதா உனக்குத் தங்கராசு?"
"ம்...."

சிறிது தூரம் நடந்திருப்போம், கரையில் எதிர்ப்பட்ட சிறுதோணி ஒன்று எங்களுக்காகவே காத்துக் கிடந்ததுபோல் இருந்தது. தோணியருகில் வந்து தரித்து நின்றோம்.. இளவரசி நேமியைத் திரும்பிப் பார்த்தேன். சிரித்தாள். இருவரும் தோணிக்குள் ஏறிக் கொண்டோம். அணியப் பகுதியினுள்ளே கால்களை மடித்து உட்கார்ந்து கொண்டேன். எனது மடியில் தலைவைத்து வானத்தையே வெறித்துப் பார்த்தபடி மல்லாந்து படுத்துக் கொண்டாள். கழுத்திலிருந்து பாதங்கள்வரை எனது பருத்திப் போர்வையால் போர்த்திவிட்டேன். எனது கரங்களையும் அவளது இருபக்கத் தோள்களாலும் வளைத்தெடுத்து தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள். அவளது கூந்தலின் இளஞ்சிவப்பு பிங்கீ மலர் எனது மடியோடு உரசி வாசனை வீசியது.

"இந்த நட்சத்திரங்களில் உனக்குப் பிரத்தியேகமாகப் பிடித்த ஏதாவது நட்சத்திரம் உண்டா தங்கராசு?"
"நிறைய இருக்கிறது நேமி"
"பெயர்களைச் சொல்ல முடியுமா?"
"மாலைவெள்ளி, மூன்று ராசாக்கள் வெள்ளி, கப்பல் வெள்ளி, குருசுவெள்ளி, செட்டியைக் கொன்ற வெள்ளி, விடிவெள்ளி....."
நான் சொல்லி முடிப்பதற்குள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

“எங்கும் நான் அறிந்திராத பெயர்களாக இருக்கின்றனவே தங்கராசு?” கேட்டுவிட்டும் சிரித்தாள்.
“எனக்கு என் பாட்டன் இப்படித்தான் சொல்லித் தந்தான்”
“ஓ, அப்படியா?, காரணப் பெயர்களாக இருக்கக்கூடும்”
“ஆமாம், அப்படித்தான் என்று நானும் நம்புகிறேன” என்றேன்.
வானத்தை அண்ணார்ந்து பார்த்தபடி மவுனமாகவே கிடந்தாள்.

“தங்கராசு!”
“சொல் நேமி”
“கரையேறிய மீன்களினதும் காடிறங்கிய முயல்களினதும் காதலைப் பற்றி நீ என்ன கருதுகிறாய் தங்கராசு?”
“பிரபஞ்சம் கோடி கோடி ஆச்சரியங்களாலும், அற்புதங்களாலும் நிறைந்தது. மனிதர் என்ற அற்புத உயிரிக்குப் புலப்படாத ஆச்சரியங்களும் அற்புதங்களும் ஏராளம். அவற்றில் ஒன்றை முதன்முதல் இன்று தரிசித்தேன் இளவரசி நேமி”
“மீண்டும் சொல்கிறேன் இளவரசியை விட்டுவிடு. சரி மேலே சொல், பின்பு...?”
“அந்தக் காட்சியை இன்னமும் கண்களுக்குள் பொத்தி வைத்துக்கொண்டு சுவைக்கிறேன்”
“புதுமை புதினங்களும், அற்புத ஆச்சரியங்களும் நிறைந்திருப்பதுபோல், புனிதர்களும் மேய்ப்பர்களும் நிறைந்து காணப் படுகிறார்கள். அவர்களைவிட இன்னும் இந்த பூமியானது மீட்பர்களால் வியாபித்துச் சுற்றிச் சுழல்கிறது இல்லையா தங்கராசு?”
“ம்”
“ம் என்றால்....”
“நல்லதாகச் சொல்கிறாயா, நகைப்புக்காகச் சொல்கிறாயா என்பது பிடிபடவில்லை இளவரசி நேமி.....?” எனது கேள்வி முடியமுன்னமே கெக்கட்டமிட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பால் எனது மடி நிறைய நூறு பூக்கள் மலர்ந்ததாக உணர்ந்தேன். தவிரவும், அவளது சிரிப்பால் எங்களிருவரையும் சுமந்து கிடந்த சிறுதோணி ஆசிர்வதிக்கப்பட்டு நிறைவானதாக எண்ணிக் கொண்டேன்.

“நீ ஒரு நல்ல மேய்ப்பனா தங்கராசு?”
“தெரியவில்லை....”
“பொய் சொல்கிறாய். தெரியும் உனக்கு”
“.......................................”
“ஒரு கதை சொல் தங்கராசு கேட்டுக்கொண்டே சற்று கண்ணயர்கிறேன் ஏனெனில் நாம் பாதிப் பயணத்தைத்தான் முடித்திருக்கிறோம். மீதியைக் கடந்துசெல்ல எனக்கு சற்று ஓய்வு வேண்டும். உனக்கும்தான்.”
“ம்..... என்ன கதை...., நல்லாயன் கதை சொல்லட்டுமா?”
“மேய்ப்பன் ஒருவனுடைய கதையாகத்தான் நிச்சயம் இருக்கும் இல்லையா?”
“ஆமாம்”
“மேய்ப்பர்கள், மீட்பர்கள் பற்றிய கதைகளையே கைகள் நிறைய அள்ளித் தந்து வைத்திருக்கிறது இந்தத் தந்தையர் உலகம் அல்லவா...?”
“..............................”
“சரி சொல் தங்கராசு”
நான் கதையைச் சொல்லத் தொடங்கும்போதே அவளிடமிருந்து புறப்பட்ட சீரான வாசனை மிகுந்த மூச்சு, அவள் கண்ணயர்ந்து விட்டாள் என்பதை எனக்குச் சொன்னது. எனது கரங்களின் அரவணைப்பிலும், வெப்பத்திலும் அவள் உடனேயே உறங்கிப்போனாள். சற்று நேரத்தில் நானும். (பயணம் தொடரும்.....)




Alle foto: Fargespill

கடந்த தை 28ம் நாளன்று **Fargespill** என்ற கலை நிறுவனத்தின் 20ம்ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள் Bergen Grieghallen மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



பல்லாயிரக் கணக்கான மக்கள் அரங்கை நிறைத்திருக்க பல நாடுகளை சேர்ந்த சிறுவர்களும் இளையோரும் தமது கலைத்திறனால் மக்களை கொள்ளை கொண்டனர்.

Fargspill உடைய நோக்கம் நோர்வேயில் வாழும் பல்லின மக்களையும் ஒருங்கிணைப்பதாகும். மாறுபட்ட காலாசாரத்தினை சேர்ந்த சிறுவர்கள், இளைஞர்களின் கலைச் செயல்பாடுகள் மூலம், குறிப்பாக இசை, நடனம் மூலம் சமூகத்தில் உள்ள பல்வேறு இன, மத குழுக்களிடையே தொடர்பையும் புரிதலையும் ஊக்குவித்து வருகிறார்கள்.

«Ka har du?» என்பது இந்த ஆண்டு நிகழ்ச்சியின் பெயராகும். அதாவது “உன்னிடம் என்ன திறமை உண்டு?” என்பது அதனது பொருளாகும். இந்த நாட்டில் வசிக்கும் சிறுவர் இளையோரிடம் எவ்வாறான கலைத்திறமைகள் இருக்கிறதோ, அவற்றினை வெளிக்கொணர்ந்து பகிர்வதும் fargespill இனது நோக்கு என்பதை வெளிப்படுத்தினர்.

இம்முறை Fargespill உடைய கலையரங்கில் 7 முதல் 25 வயது வரையிலான 70 கலைஞர் தோன்றி, மாறுபட்ட வண்ண நிகழ்ச்சிகளை வழங்கினர். அதுமட்டுமல்லாது



ஒலி, ஒளி, மேடைப் பணியாளர்கள் போன்றவர்களது தொழில் நுட்பம், நிகழ்ச்சிகள் உயர் மட்டத்தினை எட்டுவதற்கு பெரும் பங்காற்றின எனலாம்.



அத்துடன் ஈழத்து தமிழ் இளையோரான Aniston Anton (19), Paustina Pathmaraj(16), Pirajan Pathmaraj(14), Renuka Ranjan(15), Jenicca Anton(8) ஆகிய ஐவர் Fargespill கலைக்குழுவில் தோன்றியிருந்தனர்.

இவர்கள் நோர்வேயில் பிறந்தவர்கள். இங்கு வாழும் நோர்வேயிய மற்றும் பல்லின மக்களுடன் இணைந்து எம்தமிழ் கலை முத்துக்களையும் அவர்களுக்கு கடத்தி, அப்பிரமாண்டமான கலைஅரங்கை தமிழாலும், கிராமியக் கலையாலும் நிறைத்தனர். வளர்ந்துவரும் இக்கலைஞர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

உலகின் பல பாகங்களில் இருந்தும் நோர்வேயில் குடிபுகுந்து வாழும் மக்கள் மத்தியில் ஒற்றுமையையும், சமாதானத்தையும் நிறுவ, கலை எனும் அற்புதமான ஊடகத்தினை பயன்படுத்தி, ஏராளமான சிறுவர், இளையோரை வழிநடத்திவரும் Fargespill கலை நிறுவனமும், அவ்வமைப்புக்கு உதவிபுரிந்து வளர்த்துவரும் உதவி ஸ்தாபனங்களும் பாராட்டப்பட வேண்டியவையே.

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
(Print ISSN: 2703-8785)
VIPS: 729129 - Konto: 3626 31 78585